**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 53 /2023**
**வழக்கு சாட்சி. அ.சா.1**

புகார்தாரர் தரப்பு **1 ஆவது சாட்சி** தமிழரசன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி **Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk**, என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | தமிழரசன் | **வயது** | : | 70 /2026 |
| **தந்தை பெயர்** | : | அருணாச்சலம் | **தாலுகா** | : | அறந்தாங்கி |
| **கிராமம்** | : | எல்.என்.புரம் | **தொழில்** | : | |

<u>**நாள்: 13.05.2026**</u>

<u>**அ.சா.1**</u>

**முதல் விசாரணை:**

நான் இந்த புகார்தாரர் தரப்பு **1 ஆவது சாட்சி ஆவேன்**. எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவைதான். எனது நிரூபண வாக்குமூலத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7** வரையான ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 20.03.2023 ஆம் தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி கொடுத்த Axis Bank **காசோலை (காசோலை எண்.065601) அசல் ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 20.03.2023 ஆம் தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி கொடுத்த Axis Bank **காசோலை (காசோலை எண்.065601) நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 21.03.2023 ஆம் தேதி **காசோலை (காசோலை எண்.065601)** பணமாக்கப்படாமல் திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை அசல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 27.03.2023 ஆம் தேதி புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் அசல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. 31.03.2023 ஆம் தேதி புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சலக கவர் அசல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. 10.04.2023 ஆம் தேதி புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் அசல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 23.04.2023 ஆம் தேதி புகார்தாரரின் வழக்கறிஞர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சலக கவர் அசல் **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன். **எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையானது வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.05.13 05:15:25 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**